முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1360

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.06.2023**, செவ்வாய்கிழமை

1. அறம்காக்கும் ஞான வள்ளலே
ஆறுமுகனார் என் அவதார மகா ஞானியே
வரம்தந்து சுப்ரமணியப்பெருமான் யானும்
வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஆனி மாதம் **05** ம் நாள், **20.06.2023**, செவ்வாய்கிழமை)

2. ஆசி தந்து உன் கரம்பட
அகிலத்தில் அறம் தொடரும் மக்களெல்லாம்
வாசி வென்ற ஞானிகளாக மாறி
வையகத்தை காக்கும் சக்திகளாவர்
3. ஆகவே அரங்கன் உன் ஆசிபெற்ற மக்களுக்கே
அகிலத்தில் ஞானிகளாகும் வாய்ப்பு
நேசமுடன் ஆறுமுகன் யான் தந்து
நிலவுலகில் அற்புதம் நடத்துவேன்
4. நடத்தவே அரங்கன் தர்மம்
நானிலத்தில் மாற்றத்தை தரும்
இடரில்லா அரங்கன் சன்மார்க்கம்
இந்த உலகையே காத்து வழிநடத்தும்
5. வழிநடத்தும் வள்ளல் நீயப்பா
வையகத்தை காக்கும் ஞானியும் நீயப்பா
பழிபாவம் இல்லா உயர் மாந்தர்களை
பரிபக்குவமோடு உருவாக்க அவதாரமெடுத்த
6. அவதாரம் எடுத்த அரங்கன் உன் சேவையே
அகிலத்தை அற்புதம்பட மாற்றி
வருங்காலங்களில் அரங்கன் உன் தொண்டர்களைக்கொண்டு
வையகத்தை காக்கின்ற மாற்றம்

7. பெருமைபட ஆறுமுகன் யான் உருவாக்குவேன்
பேருலகில் எங்கும் அமைதி பாதுகாப்பு
ஆற்றல்பட அரங்கன் வந்த நோக்கம் பூர்த்தியாக
அனைவருக்கும் நன்மை செய்கின்ற

8. கனிவும் ஞானமும் கருணையும் கொண்ட
கலியுகத்தில் பேர்அற்புதமான
ஞான ஆட்சிக்காலமாக மாற்றுவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–